## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் - 2017

---

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகச்சட்டத்தின் 10(அ)(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 டிசெம்பர் 31 ஆம் திகதியளவில் நிருமாணிப்பு நடவடிக்கைகள் முடிவடைந்திருந்த பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் தெங்கு செயற்பாட்டு செயற்றிட்டத்துக்குரிய கட்டடத்தின் ரூ.10,948,998 ஆன நிருமாணிப்புக் கிரயம் மீளாய்வாண்டு இறுதியளவிலும் நிதிக் கூற்றுக்களில் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இல் பந்தி 69 பிரகாரம், சொத்தொன்றை தேய்மானமிடுதலானது, அதனை பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலைமைக்கு மாறிய பின் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், இந்தக் கட்டடம் 2016 ஆம் ஆண்டிலிருந்து பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் தென் மண்டபத்தினால் உடல் ஆரோக்கிய பயிற்சி நிலையமாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான தேய்மான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகமானது 2013 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நாணயத்தில் ஐ.அ.டொ. 177.33 மில்லியன் மற்றும் உள்நாட்டு நாணயத்தில் ரூ. 3,165.82 மில்லியன் தொகைகளை கடனாக தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெற்றிருந்தது. வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின்படி, 2017 டிசெம்பர் 31 ஆம் திகதியளவில் வெளிநாட்டு நாணய கடன் வட்டியாக ஐ.அ.டொ. 17.63 மில்லியன்களுக்குச் சமமான ரூ. 2,735.29 மில்லியன் மற்றும் உள்நாட்டு கடன் வட்டியாக ரூ. 433.55 மில்லியன் தொகை செலுத்த வேண்டியிருந்தன. எனினும், உள்நாட்டு நாணயத்தில் பெற்றுக்கொண்ட கடன், வெளிநாட்டு நாணயத்தில் பெற்றுக்கொண்ட கடனாகக் கருதப்பட்டு ஐ.அ.டொ.1 ரூ.155.15 ஆன செலாவணி விகிதத்தில் மாற்றப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருப்பதனால் 2017 டிசெம்பர் 31

ஆம் திகதிக்குசெலுத்த வேண்டிய உள்நாட்டுக் கடன்தொகை ரூ. 604,324,000 ஆல் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. மேலும், கடன் தவணைப்பணம் செலுத்துதலானது 2022 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருந்தபோதிலும்,நிதிக் கூற்றுக்களில் குறித்த கடன்தொகை நடப்புப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்தினால் வெளிநாட்டு மாணவர்கள் பொருட்டு வழங்கப்படுகின்ற உணவுகள் மற்றும் தங்குமிட வசதிகள் பொருட்டு மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆம் திகதிக்குஅறவிடப்பட வேண்டியிருந்த மொத்தத்தொகை ஐ.அ.டொ. 43,552 க்குச் சமமான ரூ.6,757,093 தொகை கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிக் கூற்றுக்களில் ஆதனம் பொறித்தொகுதி உபகரணம் கீழ் காணி அபிவிருத்திசெய்தலில் காட்டப்பட்டிருந்த ரூ. 1,873,445,037 சொத்து பெறுமதியினுள், ரூ. 29,891,597 பெறுமதியான வளிப்பதனாக்கி, தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் ரூ. 136,586,867 பெறுமதியான மின்சார நிறுவுதல் செலவுகள் உள்ளடங்கி இருந்தன.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

2011 ஆம் ஆண்டிலிருந்து நடைபெறும் வேலையின் கீழ் தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு செல்லப்பட்டிருந்தரூ. 13,874,542 பெறுமதியான கட்டடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் கணக்காய்வின்போது பௌதிகரீதியாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. மேலும், ரூ.43,803,874 பெறுமதியான காணி அபிவிருத்திக் கிரயம் குறைவேலையின் கீழ் 2008 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு செல்லப்பட்டிருப்பினும் குறித்த பெறுமதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சொத்துக்கள் தொடர்பிலான விபரங்கள் கணக்காய்வு பொருட்டு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 செலுத்தவேண்டிய கணக்குகள்

2017 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு கடன் கொடுநர்கள், அட்டுறு செலவுகள் மற்றும் ஏனைய கடன் கொடுநர்கள் கீழ் முறையே ரூ. 19,720,235, ரூ.1,196,249,776 மற்றும் ரூ.2,186,922,093 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொடுத்து தீர்க்கப்படாதிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூ. 85,014,562 ஆக இருந்தது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கீழே காணப்படும் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகச்சட்டம் | சட்டத்திற்கு இணங்காத வகையில் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மற்றும் முகாமைத்துவச் சபையின் செயலாளர்ஆகிய அலுவலர்கள் முகாமைத்துவச் சபை உறுப்பினர்களாக மீளாய்வாண்டினுள்ளும் செயலாற்றியிருந்தனர். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் | |

| | | |
|---|---|---|
| | குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையினது நிதி ஒழுங்குவிதி 237(ஆ) | கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்களுக்குகொடுப்பனவு மேற்கொள்வதற்கு முன் இயைபான பொருட்கள் அனைத்தும் கிடைத்துள்ளது எனவும், இயைபான இருப்பு ஆவணங்களில் குறித்த பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் உறுதிப்படுத்த வேண்டியபோதிலும், அதற்குஇணங்காத வகையில் 2017 ஆம் ஆண்டில் 619 சந்தர்ப்பங்களில் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு முன்னர் ரூ.83,283,251 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. மேற்படி கடந்த 05 ஆண்டு காலத்தினுள் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூ.19,175,853 ஆன மீதி 2017 டிசெம்பர் 31 ஆம் திகதியளவிலும்கொடுத்து தீர்க்கப்படாதிருந்தது. |
| **(இ)** | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின பிரிவு 8.9.1 (ஆ) | ரூ.500,000 பெறுமதியை விஞ்சுகின்ற பொருட்கள் அல்லது சேவைகள் பொருட்டு முறையான எழுத்திலான உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டியபோதிலும் மீளாய்வாண்டினுள் ரூ.8,632,941 பெறுமதியான பொருள் கொள்வனவு 03 ஒப்பந்தங்கள் தொடர்பில் முறையான எழுத்திலான உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| **(ஈ)** | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (i) ஏதேனும் விசேட பணிகள் பொருட்டு வழங்கப்படுகின்ற இடைக்கால கட்டுநிதியை இயைபான பணி முடிவடைந்தவுடனேயே கொடுத்துதீர்க்க வேண்டிய போதிலும், 16 அலுவலர்கள் பொருட்டு வழங்கப்பட்டிருந்த ரூ.2,316,213 முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும்கொடுத்துதீர்க்கப்பட்டிருக்கவில் லை.<br><br>(ii) ஏதேனும் விசேட பணிகள் பொருட்டுவேளைக்கேற்ற இடைக்கால கட்டுநிதியை வழங்குகையில் பதவிநிலை அலுவலர்களுக்கு மட்டும் ஒரு சந்தர்ப்பத்தில் ரூ. 100,000 உச்ச பெறுமதி வரையில் கட்டுநிதியை வழங்க முடியும் என்பதுடன், குறித்த நிதி எல்லையை விஞ்சுகின்ற சந்தர்ப்பங்களில் பொது திறைசேரியிடமிருந்து முன்னனுமதி பெறப்படல் வேண்டும். இருப்பினும், அதற்கு இணங்காத வகையில் பதவிநிலை தரமல்லாத 19 அலுவலர்கள் பொருட்டு ரூ.1,883,685 வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

-------------------------------

### 3.1 நிதிசார் விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின்படி, 2017 டிசெம்பர் 31 இல்முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதிசார் விளைவு ரூ. 48,769,301 குறைவாயிருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் குறைவு ரூ. 23,216,355 விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூ. 25,552,946 வீழ்ச்சி காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மொத்தவருமானம் ரூ.393,632,900 ஆல் அதிகரித்திருந்த போதிலும், பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலை நிருமாணம் தொடர்பில் ஒப்பந்தகாரர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் செலுத்தும்போது இடம்பெற்ற செலாவணி நட்டம் ரூ.199,755,658 இனாலும்ஏனைய செலவினங்கள் ரூ.219,430,188 இனாலும் அதிகரித்தித்தமை மேற்படி நிதிசார் விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக விளங்கின.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளில் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வுசெய்கையில் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையிலும் நிதிசார் விளைவுகளில் தொடர் குறைவு ஏற்பட்டிருந்தது. இருப்பினும், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் பொருட்டான தேய்மானம் ஆகியனவற்றை மீண்டும் சீராக்கும்போது 2013 ஆம் ஆண்டில் ரூ.359,865,269 ஆன பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு 2014 ஆம் ஆண்டில் ரூ.446,202,208 வரை அதிகரித்திருந்த போதிலும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் படிப்படியாக குறைவடைந்தது. எனினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அது ரூ.. 41,704,976 ஆல் வளர்ச்சியடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டில் உரிமை மூலதனத்தின் மீதான திரட்டு விகிதாசாரம் நூற்றுக்கு 0.316 மறை பெறுமானம் காணப்பட்டிருந்ததுடன் அது மீளாய்வாண்டில் நூற்றுக்கு 0.47 மறை பெறுமானம் வரையில் குறைவடைந்திருந்தது.

(ii) மீளாய்வாண்டுக்கும் முன்னைய ஆண்டுக்கும் ஏற்புடைய நடைமுறை விகிதாசாரம் முறையே 0.3 மற்றும் 2.5 விளைந்திருந்தமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நடைமுறை விகிதாசாரத்தில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. போதனா வைத்தியசாலை நிருமாணம் பொருட்டு பெறப்பட்டிருந்த கடன்தொகை மீளாய்வாண்டில் நடைமுறைக் சொத்துக்களின் கீழ் காட்டப்படடிருந்தமை இந்த விகிதாசார வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

### 4.1.1 செயற்பாட்டுத்தன்மையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதுகாப்பு சேவைகளிலுள்ள அலுவலர்கள் பொருட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலான பட்ட பாடநெறி நடாத்தும் முகமாக 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த இந்த நிறுவனம் 1988 இன் 27 ஆம் இலக்க மற்றும் 2007 இன் 50 ஆம் இலக்க திருத்தச் சட்டங்களின்மூலம் பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டிருந்த போதிலும் பாதுகாப்பு சேவைகளில் சேவையில் ஈடுபடாத இல்லாத மாணவர்களுக்கும் பட்டம் வழங்குவதற்காக தத்துவம் அளிப்பதற்கான பிரிவுகள் மேற்படி சட்டங்களில் உள்ளடக்கப்படாதிருந்தன. இருப்பினும், ஆரம்பத்திலிருந்து 2017 டிசெம்பர் 31 வரையில் பணம் செலுத்தும் அடிப்பயில் 177 வெளிநாட்டு மாணவர்களும் அடங்கலாக 3,329 வெளி மாணவர்களும் சேர்க்கப்பட்டு பட்டம் அளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டம் பொருட்டு தவிர்ந்த ஏனைய பட்ட கற்கைநெறிகள் பொருட்டு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும்போது படையினர் குடும்பங்கள் பொருட்டு மொத்த மாணவர் எண்ணிக்கையில் நூற்றுக்கு 20 மாணவர் எண்ணிக்கையினரை ஒதுக்குவதற்கு 2011 பெப்ரவரி 18 ஆம் திகதி நடைபெற்ற பாதுகாப்புக் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவச் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. எனினும், குறித்த மாணவர் எண்ணிக்கையினரை தெரிவுசெய்யும் அடிப்படை பற்றி நிச்சயமாக காட்டப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பட்ட கற்கைநெறிகள் பொருட்டு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும்போது படையினர் குடும்பங்களின் மாணவர்கள் பொருட்டு குறைந்த இசெட் புள்ளி பெறுமானங்கள் மற்றும் ஏனைய மாணவர்கள் பொருட்டு கூடிய இசெட் புள்ளி பெறுமானங்கள் என்றவாறு கருதி மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 மே 11 ஆம் திகதி வரையிலான காலத்தினுள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு பாதுகாப்புக் பல்கலைக்கழகத்தினால் செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூ.8,210,785 ஆன உதவுதொகை இயைபான காலத்தினுள் பணம் அனுப்பப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதன்படி மேலதிக அறவீடுகளுக்கு உட்படக்கூடும் என கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. மேலும், ஊழியர் வேதனாதிகள் தொடர்பிலான கொடுப்பனவுகள் பாதுகாப்புக் பல்கலைக்கழக நிதியத்தினால் செலுத்த வேண்டியிருந்த போதிலும் மேற்படி உதவுதொகைகள் பல்கலைக்கழக சுய நிதி நிதியத்திலிருந்து 2017 யூன் 14 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2017 டிசெம்பர் 31 ஆம் திகதியளவில் 346 மாணவர்கள் தென் மண்டபத்தினுள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதிலும் 08 விரிவுரை அறைகளைக் கொண்ட இந்த மண்டபத்தின் கல்வி நடவடிக்கைகளுக்கான விரிவுரை அறை இடவசதியளவு போதிய மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. தென் மண்டபத்திலுள்ள கணினி பீடத்தின் கற்கைநெறிகள் பொருட்டு மீளாய்வாண்டு இறுதியளவில் 166 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அவர்களுக்கு போதியளவு கணினி கற்கை வசதிகள் இல்லாத காரணத்தினால் கட்டப்பட்ட சுற்றாடல் மற்றும் விண்வெளி விஞ்ஞான பீடத்துக்குரிய ஆய்வுகூடத்தில் கற்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன், தென் மண்டபம் பொருட்டு நிரந்தர நூலக கட்டடமொன்று இல்லாத காரணத்தினால் பட்டப்படிப்பு மாணவர்கள் பொருட்டான நூலகம் 1152 சதுர அடிகளைக் கொண்ட கூரைத்தகடுகளால் அமைக்கப்பட்டிருந்த முன் முடிக்கப்பட்ட கட்டடமொன்றில் பேணப்படுவதாக பௌதிக சோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 சனவரி 10 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி உத்தேச சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் பல்கலைக்கழகச் சட்ட வரைவு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் வரையில் பாதுகாப்புக் பல்கலைக்கழக போதனா வைத்தியசாலைக்கு பணிப்பாளர் சபையொன்றினால் நிருவகிக்கும் பொருட்டான இடைக்கால வேலைத்திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன் பிரகாரம், வைத்தியசாலை நடவடிக்கைகளை நடாத்திக்கொண்டு செல்வதற்காக பதவி வழியில் நியமிக்கப்பட்ட 13 அங்கத்தவர்கள் மற்றும் அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட 6 அங்கத்தவர்கள் அடங்கலாக பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2017 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையில் போதனா வைத்தியசாலையின் நிருவாகக் கட்டமைப்பு தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள தென் மண்டபம், மொனராகலை மாவட்டத்தின் செவனகல பிரதேசச் செயலகப் பிரிவுக்குரிய 161.7363 ஹெக்ரயார் நிலப்பரப்பிலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ பிரதேசச் செயலகப் பிரிவின் இலங்கை முதலீட்டுச் சபைக்குரிய 7.6838 ஹெக்ரயார் நிலப்பரப்பிலும் தாபிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த காணிகளின் உரிமையை சட்டபூர்வமாக பல்கலைக்கழகத்துக்கு உரித்துமாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகமானது 4 அவத்தைகளின் கீழ் வேரஹர பிரதேசத்தில் போதனா வைத்தியசாலையை நிருமாணிக்கும் நடவடிக்கைகள் 2013 ஏப்றல் 04 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2017 மே 20 ஆம் திகதியளவில் நிருமாணிப்புக்கள் முடிவுறுத்தப்பட்டிருந்தன. எனினும், ஒவ்வொரு அவத்தை பொருட்டு தேவைப்படும் மருத்துவ உபகரணங்களைப் பொருத்துவதற்கு ஐ.அ.டொலர் 39,629,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வுபகரணங்களை கொள்வனவுசெய்தல் திட்டமிடப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், வைத்தியசாலையினுள் செயற்படுத்தப்பட வேண்டிய சேவைகளை நிறைவேற்றுவதற்காக 13 அலகுகள் இனங்காணப்பட்டிருந்ததுடன், உரிய பதவியினர் இல்லாமை, தேவையான மருத்துவ உபகரணங்கள் நிறுவப்படாமை போன்ற காரணங்களினால் அந்தப் பிரிவுகள் மீளாய்வாண்டு இறுதிவரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தென் மண்டபத்துக்குரிய கட்டட நிருமாணிப்புக்கள் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 03 அவத்தைகளின் கீழ் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டில் முதலாம் அவத்தையை முடிவுறுத்துவதற்கும் 2019 ஆம் ஆண்டு இறுதியளவில் மற்றைய அவத்தைகளின் நிருமாணிப்புக்களை முடிவுறுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தன. எனினும், இரண்டாம் அவத்தை, மூன்றாம் அவத்தைகளின் நடவடிக்கைகளுக்கு போதியளவு நிதி இல்லாமையினால் மந்தகதியில் இடம்பெறுவது அவதானிக்கப்பட்டது.

(இ) பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலையை நிருமாணிக்கும் பொருட்டு பொது திறைசேரியின் பிணைப்பொறுப்பின் மேல் 2013 ஏப்ரல் 29 ஆம் திகதி ஐ.அ.டொலர் 177.33 மில்லியன்களுக்கு சமமான ரூ.23,102,546,177 வெளிநாட்டு நாணயத்தில் கடனொன்றும் ரூ.3,165,821,000 ஆன வெளிநாட்டு நாணயத்தில் கடனொன்றும் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெறப்பட்டிருந்தன. குறித்த கடன்தொகையை 2033 ஆம் ஆண்டு இறுதியளவில் பல்கலைக்கழகம் செலுத்தி முடிக்க வேண்டியதுடன் அதற்காக 2018 ஆம் ஆண்டின் பின்னர் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் ஈட்டப்படும் வருமானத்தினால் கடன் தவணையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். இருப்பினும், 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு விளைவுகளில் குறைவு விளைந்தமையினால் மேற்படி கடன்தொகையை கொடுத்துதீர்த்தல் பிரச்சினைக்குரியது என அவதானிக்கப்பட்டது.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

2015 ஏப்ரல் 30 ஆம் திகதி போதனா வைத்தியசாலையை நிருமாணிப்பு வேலைகளை முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2017 மே 20 ஆம் திகதியளவில் நிருமாணிப்பு வேலைகள் 02 ஆண்டுகள் தாமதமாகி இருந்தமையினால் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெறவிருந்த ஐ.அ.டொலர் 177.33 மில்லியன்களான கடன்தொகையை பெறுவது தாமதமடைந்திருந்தது. மேற்படி கடன்தொகையை பெறுவது தாமதமடைந்தமையினால் அந்நிய செலாவணி பரிமாற்று விகிதாசார மாற்றத்தின் பேரில் நட்டத்தை தீர்ப்பதற்காக ரூ.400 மில்லியன் மேலதிக கடன் பெறுமதியை கடன்தொகைக்கு சேர்ப்பதாக தேசிய சேமிப்பு வங்கியினால் எழுத்தில் அறிவித்திருந்தது.

**4.5 பதவியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொத்தலாவலை பாதுகாப்புக் பல்கலைக்கழகத்துக்குரிய அலகுகளுக்கு முப்படைகளினால் இணைக்கப்பட்டிருந்த அலுவலர்கள் தொடர்பிலான விபரங்கள் பின்வருமாறு.

| நிறுவனம் | பதவிநிலை அலுவலர் எண்ணிக்கை | பதவிநிலைஅல்லாத அலுவலர் எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| கொ.பா.ப.இரத்மலானை | 106 | 809 | 915 |
| கொ.பா.ப.போதனா வைத்தியசாலை | 49 | 313 | 362 |
| தென் மண்டபம், சூரியவெவ | 11 | 85 | 96 |
| மொத்தம் | 166 | 1,207 | 1,373 |

பல்கலைக்கழகத்தின் பதவியினர் பொருட்டு மேலே குறிப்பிடப்பட்டவாறு முப்படை உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த அலுவலர்களின் ஊதியம் மற்றும் படிகள் இயைபான பாதுகாப்புப் படைகளினால் செலுத்தப்பட்டிருந்தன. பல்கலைக்கழகம் பொருட்டான அங்கீகரிக்கப்பட்ட பதவியினருக்கு மேலதிகமாக இணைக்கப்பட்டிருந்த முப்படை அலுவலர்கள் தொடர்பில் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுமாறு 2017 மார்ச் 23 ஆம் திகதி நடைபெற்ற பொது தொழில்முயற்சிகள் பற்றிய குழுவினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருப்பினும், மீளாய்வாண்டு இறுதிவரையிலும் அத்தகைய அங்கீகாரத்தின பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் 08 பீடங்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் 369 அலுவலர்களான போதிலும் 2017 டிசெம்பர் 31 ஆம் திகதியளவில் சேவையிலிருந்த பதவியினர் 284 அலுவலர்கள் ஆகும். மேலும், இந்த பீடங்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் முறையே 47, 161 பேர்களான போதிலும் 2017 டிசெம்பர் 31 ஆம் திகதியளவில் இணைக்கப்பட்டிருந்த எண்ணிக்கையினர் முறையே 19, 99 பேர்கள் மட்டுமேயாகும் என அவதானிக்கப்பட்டது.

(இ) பல்கலைக்கழகத்தின் தென் மண்டபத்தில் செயற்பாட்டிலிருந்த இரு கற்கைபீடங்களின் அங்கீகரிக்கப்பட்ட விரிவுரையாளர்கள் 75 பேர்களான போதிலும் 2017 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று சேவையிலிருந்த விரிவுரையாளர்கள் 29 பேர்கள் மட்டுமேயாகும். மேலும், இந்த மண்டபம் பொருட்டு 12 பேராசிரியர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பேராசிரியர் எவரும் ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இந்த மண்டபம் பொருட்டு சிரேஷ்ட விரிவுரையாளர் 40 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 13 விரிவுரையாளர்கள் மட்டுமே சேவையில் இருந்தனர். போதியளவு கல்விசார் பதவியினர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கான மாற்று வழிகளை பல்கலைக்கழகம் கருத்திலெடுத்திருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்களை எய்துதல்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்கள் தொடர்பிலான 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க கடிதம் மற்றும் தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆம் திகதிய பீடி/சீபீபி/4/1/2 -2018 ஆம் இலக்க சுற்றறிக்கைபால் கவனஞ் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க, பாதுகாப்புக் பல்கலைக்கழகம் அதனது விடயப்பரப்பின்படி எய்தப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்கள், இலக்குகள் மற்றும் குறித்த இலக்குகளை அடைவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களும் இலக்குகளின்படி அடைதலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்கள் மற்றும் இலக்குகளை இனங்காணாத காரணத்தினால் அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள், மனித வளம் மற்றும் பௌதிக வளங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்த முடியாதிருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியபோதிலும், 2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய நிதிக் கூற்றுக்கள் 2018 மே 17 ஆம் திகதியே கணக்காய்வு பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் இணைக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பதவியினர் 04 அலுவலர்களை கொண்டிருந்ததுடன், பாதுகாப்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட தென் மண்டபம் மற்றும் போதனா வைத்தியசாலை ஆகியவற்றை உள்ளடக்கியதாக பரந்த தொழிற்பாடுகளை நிறைவேற்றும் நிறுவனமொன்றாக மாற்றமடைந்திருக்கின்ற போதிலும் அதற்கு ஏற்றவாறு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பதவியினர்களை அதிகரித்தல் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 6.3 பெறுகைகள்

பல்கலைக்கழகமானது ஒவ்வொரு நிதியாண்டு பொருட்டு பெறுகைத் திட்டத்தை தயாரிக்கின்ற போதிலும், திறைசேரி நிதியேற்பாட்டின்மூலம் நிதியீட்டம் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மூலதன செலவினங்கள் மட்டுமே அதில் அடங்கியிருந்தது. இந்த பெறுகைத் திட்டம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் சுய நிதி நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவினங்கள் பொருட்டு பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 05 செலவுக் கூறுகளின் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையில் நூற்றுக்கு 21 முதல் முதல் 73 வரை வீச்சிலான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 6.5 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வுப் பந்திகள்

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 47 ஏக்கர் 37.9 றூட் விஸ்தீரமான காணியில் பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலை நிருமாணிக்கப்பட்டிருப்பினும் 2017 டிசெம்பர் 31 அம் திகதி வரையில் அதன் உரிமை மாற்றிப்பெற்றிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- |
| (அ) ஒப்பந்தக் கட்டுப்பாடு | எழுத்திலான உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்படாமல் ஒப்பந்தங்களை அளித்தல். |
| (ஆ) கொள்வனவுக் கட்டுப்பாடு | (i) அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் பெறுகை வழிகாட்டல்களுக்கு புறம்பாக பொருட்களை கொள்வனவு செய்தல்.<br>(ii) பொருட்கள் கிடைப்பதற்கு முன்னர் முற்பணம் செலுத்துதல். |